1987 மார்ச் 26]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, திட்டம் உண்டு. ஆனால் அவர் சொல்கிற நகராட்சிக்கு உண்டா இல்லையா என்பதைப் பொறுத்தவரையில் தனிக் கேள்வி போட்டால்தான் விவரங்களைத் தர இயலும்.

தமிழ்நாடு சிவில் சப்ளை கார்ப்பரேஷன் ஊழியர்கள்.

179—(*வினா எண் 8015) திரு. ஆர். ரெங்கசாமி: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சிவில் சப்ளை கார்ப்பொரேஷன் ஊழியர்களை கூட்டுறவு அங்காடிகளுக்கு மாற்றும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கடைகளை கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாற்றுகையில் இவ் ஊழியர்கள் விரும்பினால் அங்கு எடுத்துக் கொள்ளப்படுவர்.

(ஆ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்தி வரும் நியாயவிலைக் கடைகளை கூட்டுறவுச் சங்கங்கள் நடத்த வேண்டுமென அரசு வெளியிட்ட ஆணைகளை எதிர்த்து நுகர் பொருள் வாணிபக் கழகப் பணியாளர்கள் உயர்நீதிமன்றத்திலும் உச்சநீதிமன்றத்திலும் வழக்குகள் பதிவு செய்தனர். உயர்நீதி மன்றம் அரசின் ஆணைகளுக்கு இடைக்கால தடை விதித்துள்ளது. உச்சநீதிமன்றம் வழக்கை தள்ளுபடி செய்துள்ளது. உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பினை ஒட்டி உயர்நீதிமன்றத்தினை அது விதித்துள்ள இடைக்கால தடையினை நீக்குமாறு அரசு கேட்டுள்ளது.

திரு. ஆர். ரெங்கசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுடைய கடைகளை கோவாப்பரேடிவ் சொசைட்டிகளுக்கு மாற்றும்போது அங்கு பணியாற்றும் ஊழியர்கள் மற்றும் தொழிலாளர்களின் நிலைமை என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

[1987 மார்ச் 26

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஊழியர்கள் விரும்பினால் கூட்டுறவு நிறுவனங்களுக்கும் போகலாம்; இல்லை என்றால் இங்கேயே இருக்கலாம். இதுதான் அவர்களுடைய நிலைமை.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் இயக்கப் படக்கூடிய அமுதம் அங்காடிகளை கூட்டுறவுத் துறைக்கு மாற்றிவிட்டால் ஏற்கெனவே இருந்த அந்தந்த இடங்களில் அமுதம் அங்காடிகள் செயல்படுமா? அந்தந்த இடங்களிலிருந்து கூட்டுறவு சொசைட்டி இருக்கும் இடத்திற்கு சென்று விடும் என்று எண்ணுகின்ற நிலைமை பொதுமக்கள் மத்தியில் இருக்கிறது. ஆகவே அந்தந்த இடங்களிலேயே தொடர்ந்து அவற்றை இயக்கச் செய்து மக்களுக்கு பொருட்கள் வினியோகம் செய்யப் படுமா? அடுத்து நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணியாற்றக் கூடிய தொழிலாளர்கள் 4,000-க்கு மேற்பட்டவர்கள் நிரந்தரம் இல்லாமல் அங்கே இருந்து வருகிறார்கள். அவர்களைத் தொடர்ந்து நிரந்தரமாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, கடைகளின் எண்ணிக்கையோ, இடங்களோ மாறாது. நிர்வாகம் மட்டும்தான் மாறுகிறது. தற்காலிகமாகப் பணி யாற்றுகிற ஊழியர்கள் விரும்பி கூட்டுறவு நிறுவனங்களுக்குச் செல்வார்களானால் அங்கே அவர்களை நிரந்தரமாக ஆக்குவதற் கான வாய்ப்பு உண்டு.

திரு. மா. கதிர்வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, தமிழகம் முழுவதும் இப்போது கடுமையாக வறட்சி நிலவு கிறது. தற்போது குடும்ப கார்டுகளுக்கு நியாயவிலைக் கடை களின் மூலமாக ஒரு கார்டுக்கு 12 கிலோ என்ற வீதத்தில் அரிசி வினியோகிக்கப்படுகிறது. கடுமையான வறட்சி கிராமப்புறங் களில் நிலவுகிற இந்தச் சூழ்நிலையில் பெருத்த உணவுப் பஞ்சம் ஏற்பட்டு இருக்கிறது. எனவே 12 கிலோ என்பதை 20 கிலோ அரிசியாக உயர்த்திக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, தனிக் கேள்வி போடவும்.

உண்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1987 மார்ச் 26]

(முற்பகல் 10-20)

திரு. கே. சுப்பராயன்: பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் அத்தகைய முடிவினால் நுகர்பொருள் வாணிபக் கழகத் தொழி லாளர்கள் தொடர்ந்து போராடி வருகிறார்கள். அவர்களுடைய அச்சம் என்ன? அவர்களுடைய பிரச்சினை என்ன என்பதைக் கண்டறிந்து சங்கப் பிரதிநிதிகளை நேரிலேயே அழைத்துப் பேசி, அவர்களுடைய குறைகளைத் தீர்த்து, அந்த முடிவை அமுலாக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமசசந்திரன்: தலைவர் அவர்களே, அத்தகைய யோசனை இல்லை.

திரு. கே. எம். தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நுகர்பொருள் வாணிபக் கழகக் கடைகள், ரெவின்யூ கிராமத்திற்கு ஒன்று என்ற நிலையில்தான் இருக்கிறது. மஜரா கிராமங்கள் 4, 5 மைல்களுக்கு அப்பால் இருந்தால் அங்கே கடைகள் இல்லை என்று சொல்லுகிறார்கள். எனவே நிலைமையை உணர்ந்து அந்தக் கிராம மக்களுக்கும் பொருள்களை வாங்க வசதியாக கடைகளை ஏற்படுத்த அமைச்சர் அவர்கள் ஏதேனும் வழிவகை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக வருவாய் கிராமத்திற்கு ஒரு கடை என்று இருந்தாலும், நெடுந்தொலைவில் ஒரு கிராமம் இருந்தாலும், அல்லது இயற்கை இடர்பாடுகள் அதாவது ஆறு, ஓடை, வாய்க் கால் போன்றவை இடையில் இருந்தால், அங்கே மேலும் கடை களை துவக்குவதற்கு வாய்ப்பு உள்ளது. குறிப்பிட்டு எங்கேனும் உறுப்பினர்கள் தெரிவித்தால் அரசு நடவடிக்கை எடுக்கும்.